# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1823/15- 2013 අගෝස්තු 13 වැනි අඟහරුවාදා - 2013.08.13

***1823/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ஜீசீஎப்/அத்/சீபீ/38/எல்ஆர்.
காணி அமைச்சின் இல. : எல்/03 ஜே/92/எல்ஆர்பீ/365.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 770/8 ஆம் இலக்க மற்றும் 1993.06.09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 89 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை மூலம் அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2000.05.26ஆந் திகதிய கொ.8160 ஆம் இலக்க ஆரம்பவரைபடத்தில் துண்டு இல. 01 தொடக்கம் 02 வரை விபரிக்கப்பட்டுள்ள உரித்துக் கோரல் முன் வைக்கப்படாததும் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்ததுமான காணித்துண்டுகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை, இக் காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் குறித்த வழக்கு இலக்கங்களின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

**அட்டவணை இல. 01**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் மாகாணம்; |
| மாவட்டம் | : கொழும்பு; |
| பிரதேச செயலாளர் பிரிவு | : திம்பிரிகஸ்யாய; |
| கிராமம் | : திம்பிரிகஸ்யாய; |
| காணியின் பெயர் | : டொரிங்ரன் மாவத்தை; |
| வரைபட இல. | : ஆ. வ. இல. கொ. 8160; |
| துண்டு இல. | : 03; |
| விஸ்தீரணம் | : 0.0185 ஹெக்டயார்; |
| மாவட்ட நீதிமன்றம் | : கொழும்பு; |
| வழக்கு இல. | : 00034/11/டீஎல்ஏ; |
| நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்துள்ளவரின் பெயரும் முகவரியும் | : ஜசலாபி எஸ்டேட்ஸ் லிமிடட், இல. 216, த சேரம் பிளேஸ், கொழும்பு 10. |
| வைப்புச் செய்யப்பட்ட தொகை | : ரூ. 27,50,000 (ரூபா இருபத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம்). |

**அட்டவணை இல. 02**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் மாகாணம்; |
| மாவட்டம் | : கொழும்பு; |
| பிரதேச செயலாளர் பிரிவு | : திம்பிரிகஸ்யாய; |
| கிராமம் | : திம்பிரிகஸ்யாய; |
| காணியின் பெயர் | : வரிமதிப்பீட்டு இல. 100/30, புலர்ஸ் மாவத்தை ; |
| வரைபட இல. | : ஆ. வ. இல. கொ. 8160; |
| துண்டு இல. | : 11; |
| விஸ்தீரணம் | : 0.0039 ஹெக்டயார்; |
| மாவட்ட நீதிமன்றம் | : கொழும்பு; |
| வழக்கு இல. | : 00029/11/டீஎல்ஏ; |
| வைப்புச் செய்யப்பட்ட தொகை | : ரூ. 25,000 (ரூபா இருபத்தையாயிரம்). |

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் தத்தமது உரித்துரிமையை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்து தமக்குரிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களை இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

சீ. டபிள்யூ. அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கைக் காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, இராஜகிரிய,
2013.07.06.

08-883


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.